DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.349 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பூமிநாதன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கருங்கவயலில் வசித்து வருகிறேன்.சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன வேலுவை எனக்கு தெரியும், எனக்கு சித்தப்பா ஆவார். அ.சா.1 யைம் தெரியும்.சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. நான் திணையத்தூர் வைரம் டீ ஸ்டாலில் மாலை சுமார் 5 மணியளவில் டீ குடித்து கொண்டிருந்தேன். அப்போது நான் டீ குடித்து கொண்டிருந்த கடையில் இருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் உள்ள ரெத்தினம் மளிகை கடையில்

பொருட்கள் வாங்கிவிட்டு வேலு ரோட்டிற்கு மறுபக்கம் நின்று கொண்டிருந்த தனது சைக்கிளை எடுப்பதற்கு ரோட்டை கடந்தார். அப்போது திருவாடானையிலிருந்து திணையத்தூர் நோக்கி வந்த இருசக்கர வாகனம் ஒன்று வேலு மீது மோதியது. அதில் வேலுவிற்கு உடம்பில் பல இடங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. நாங்கள் ஒரு வாகனத்தில் ஏற்றி வேலுவை திருவாடானை அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தோம். அங்கிருந்து மேல் சிகிச்சைகாக அவர் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்குஅவர் இரவு 10 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் அழகர் சாமி மகன் மனோகரன் என்று தெரிந்து கொண்டேன். தற்போது நீதிமன்றத்தில் அந்த நபர் இருக்கிறாரா இல்லையா என்று எனக்கு தெரியவில்லை.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.சம்பவம் நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை எனறும் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் அதிகமாக செல்லும் அகலமான சாலை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகே அரசு நடுநிலை பள்ளி,பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான்,. சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து மளிகை பொருட்கள் வாங்குவதற்கு திணையத்தூர் வரவேண்டும் என்றால் சரிதான். அதனால் எந்நேரமும் சம்பவயிடத்தில மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால்சரிதான். சம்பவசமயத்தில் சம்பவயிடத்திற்கு அருகே இருபக்கங்களிலும் பேரிகார்டு போடபட்டு இருந்தது என்றால் சம்பவசமயத்தில் போடப்பட்டிருந்தது. தற்போதுஇல்லை.

2. நான் டீ கடைக்குள் டீ குடித்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான்,. சத்தம்கேட்டுதான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். ரோட்டை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சைக்கிளை எடுக்க ரோட்டை கடந்த போது விபத்து ஏற்பட்டது. விபத்தில் இறந்துபோன நபருக்கு 80 வயதிற்குள் இருக்கும். விபத்தில் இறந்த நபருக்கு வயது முதிர்வின் காரணமாக சரிவர காது கேட்காது என்றால் சரிதான்.

விபத்தில் இறந்த நபருக்கு காது சரியாக கேட்காமல் கவனக்குறைவாக ரோட்டை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் எனது சித்தப்பா என்பதாலும் அ.சா.1 எனது அண்ணன் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.